Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி -17 | 02-07-2003 | புதன்கிழமை | ஓசை 134




## பிந்துனுவெவ தமிழ் இளைஞர்கள் படுகொலை

# இரு பொலிசார் உட்பட 5 குற்றவாளிகளுக்கு மேல் நீதிமன்றம் மரண தண்டனைத் தீர்ப்பு

## மூன்று நீதிபதிகள் ஏகமனதாக முடிவு

(கொழும்பு)

**பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் 27 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உட்பட ஐந்து குற்றவாளிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கியுள்ளது. மூன்று நீதிபதிகள் கொண்ட நீதிமன்றமே இத்தீர்ப்பை ஏகமனதாக நேற்று வழங்கியது.**

மேல் நீதிமன்ற நீதிபதிகளான சரத் அம்பேபிட்டிய, எரிக்பஸ்நாயக்க, உபாலி அபயரட்ண ஆகியோரே இந்தத் தீர்ப்பை நேற்று வழங்கியுள்ளனர்.

மரண தண்டனை வழங்கப்பட்ட ஐவரில் இருவர் பொலிஸ் அதிகாரிகள், மூவர் கிராம வாசிகள். 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி பண்டாரவளை- பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் மீது நடத்தப்பட்ட கோரத் தாக்குதலில் 27 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் 14 இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நடைபெற்று வந்தது. இதில் 41 பேருக்கெதிராக சட்டமா அதிபர் வழக்குத் தொடர்ந்திருந்தார். விசாரணைகளின் போது போதிய சாட்சியங்கள் இல்லையெனத் தெரிவித்து 23 பேரை நீதிமன்றம் விடுதலை செய்ததுடன் ஏனைய 18 எதிரிகளுக்கெதிராக வழக்கு நடைபெற்று வந்தது. இந்த 18 பேரில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் புதிய முகாம்களிலிருந்து வெளியேறினாலே நாமும் புதிய முகாமிலிருந்து வெளியேற முடியும்

### திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக்

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் சிறிலங்கா படையினர் புதிய முகாம்கள் பலவற்றை அமைத்துள்ளனர். அந்த முகாம்களிலிருந்து அவர்கள் வெளியேறினால் மட்டுமே நாமும் புதிய முகாமிலிருந்து வெளியேற முடியும் என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் கூறியுள்ளார்.

திருகோணமலை கிண்ணியா - குரங்குபாஞ்சான்குளம் பகுதியில் அமைந்திருக்கும் விடுதலைப் புலிகளின் முகாமை அகற்றுமாறு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுதலைப் புலிகளைக் கேட்டுள்ளது. அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமி

(08ஆம் பக்கம் பார்க்க)

## கனேடியத் தூதுவர் நாளை வருகை

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வன்னிக்கான விஜயத்தை நாளை மேற்கொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து உரையாடு

(08ஆம் பக்கம் பார்க்க)

## பிந்துனுவெவ படுகொலைக்கு பொலிசாரே முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும்

### கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பு

பிந்துனுவெவ படுகொலையைத் தடுத்துநிறுத்த பொலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை என இப்படுகொலை வழக்கு விசாரணையை மேற்கொண்டு வரும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய தீர்ப்பின் போது நேற்று குற்றம் சாட்டியுள்ளார்.

பொலிசார் தமது கடமையினை உரிய முறையில் மேற்கொள்ளவில்லை. சட்டத்தை நிலைநாட்ட பொலிசார் தவறிவிட்டனர் எனக்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா பாராளு. சபாநாயகருக்கு பொ. ஐ.மு. ஆயுத தாரிகள் மரண அச்சுறுத்தல்

(கொழும்பு)

சிறிலங்காவின் சபாநாயகருக்கு பொ.ஐ.முன்னணியின் ஆயுத தாரிகள் மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். கடந்த சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் தனது உத்தியோக பூர்வ வாகனத்தில் நீர்கொழும்பை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது வழி மறித்த ஆயுத பாணிகள் அவரை அச்சுறுத்தியுள்ளனர்.

வடமத்திய மாகாண சபைக்குச் சொந்தமான வாகனத்தில் வந்து வழிமறித்த பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் இருவரே சபாநாயகரை அச்சுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விசேட பொலிஸ் குழு ஒன்று இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்காக அநுராதபுரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## இன்று முதல் கொழும்பில் படையினர் சைக்கிள் ரோந்து

இன்று முதல் கொழும்பில் பொலிசார் துவிச்சக்கரவண்டியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர். இவ் ரோந்து நடவடிக்கை 24 மணித்தியாலமும் நடைபெறவுள்ளது. இந் நடவடிக்கை கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகேயின் ஆலோசனையிலேயே நடைபெறவுள்ளது.

இந்த ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் பொலிசார் நவீன தொலைத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழமெங்கும் கரும்புலிகள்நாளை எழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு

### ஊர்தி பவனி, விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்

கரும்புலிகள் நாளை தமிழீழமெங்கும் எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கரும்புலிகள் நாளன்று காலை 9.00 மணிக்கு பொ.துச்சுடரேற்றி தேசியக் கொடியேற்றலுடன் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. மாலை 6.15 மணிக்கு பிரதேசவாரியாக பொதுக் கூட்டங்களும், கலை நிகழ்வுகளும் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, கரும்புலிகள் நிகழ்வாக ஊர்திகள் பவனி, சிரமதான நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் என்பனவும் நடைபெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரும்புலிகளின் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்திப்பவனி மக்கள் வணக்கத்திற்காக இன்று காலை 9.00 மணிக்கு புதுக்குடியிருப்பு நகரிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு போக்கனை ஊடாக முல்லை நகரைச் சென்றடைந்து அங்கிருந்து செம்மலை ஊடாக குமுழமுனை, தண்ணீரூற்று, முள்ளியவளையை அடையும். அங்கிருந்து ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குச் சென்று அங்கிருந்து புதுக்குடியிருப்பு

(08ஆம் பக்கம் பார்க்க)

## கடல் மோதல்களைத் தவிர்க்கும் யோசனைகளுக்கு ஒத்துழைப்போம்

### சிறிலங்கா அரசாங்கம் அறிவிப்பு

விடுதலைப்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் கடலில் ஏற்படும் மோதல்களைத் தவிர்க்கும் யோசனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க அரசு விருப்பம் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்படி கடற்படையினரின் படகுகள் தொடர்பான விபரங்களை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுக் குழுவினருக்கு வழங்கி அவர்களுடன் ஒத்துழைப்பாகச் செயற்ப

(08ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் 96,97இல் காணாமற்போனவருடையதாயிருக்கலாம்

### யாழ். காணாமற்போனோர் சங்க உதவியலுவலர்

அரியாலை நெடுங்குளத்தில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் 1996,97ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனவருடையதாக இருக்கலாம் என யாழ். மாவட்ட காணாமற்போனோர் சங்கத்தின் உதவியலுவலர் விஜயகுமார் தெரிவித்துள்ளார். உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின்போது ராஜபக்ச எனும் இராணுவச் சிப்பாய் சாட்சியமளித்ததன்படி செம்மணியிலும் அதனையண்டிய பகுதிகளிலும் இராணுவத்தினால் புதைக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் இருக்கின்றது. செம்மணியை அண்டிய பகுதியாகக் காணப்படும் இந்த அரியாலைப் பகுதியிலும் இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட மனித புதைகுழிகள் தான் என்று தாம் நம்புவதாகவும் கூறினார்.

இதேவேளை, இந்த புதைகுழி தொடர்பாக மேலதிக பரிசோதனைகளை மேற்கொள்ள காலியிலிருந்து சட்ட மருத்துவ அதிகாரிகள் வரவழைக்கப்பட்டுள்ளனர். (33)

## உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியேற அனுமதிப்பது சாத்தியமில்லை

### மனித உரிமை ஆணைக்குழுவிடம் பலகல்ல தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து படையினர் விலகுவது என்பது படையினரின் பாதுகாப்பு பிரச்சினைகளுடன் தொடர்புடையதாகவிருப்பதால், உடனடியாக அப்பகுதிகளில் மக்களை மீளக்குடியேற அனுமதிப்பது சாத்தியமில்லையென இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் முப்படைத் தளபதிகளும் அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆலோசித்துள்ளனர்.

400க்கும் அதிகமான முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியமர்வு தொடர்பாக பொதுமக்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக மனித உரிமைகள் அணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி 07 தட

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

மகேஸ்வரன் சந்தானலட்சுமி ஆகிய எனது அடையாள அட்டையுடன் (635553727v) பணப் பை கிளி.யில் இருந்து இராமநாதபுரம் செல்லும் பஸ்சில் கடந்த மாதம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையை மட்டு மேனும் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3410)

### தவறிவிட்டது

அருந்தவநாதன் ஜீவேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 11.06.03 அன்று கிளிநொச்சி நகரப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுகொள்கிறேன். (3412)

### தவறிவிட்டது

நடராஜா சிதம்பரநாதன் ஆகிய எனது அடையாள அட்டை இல. 400711526 v புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 01.07.03 அன்று காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆனந்தன் சுவையகம், நெடுங்கேணிச் சந்தி, தண்ணீரூற்று அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (3246)

### சனி மாற்றம் உங்களுக்கு எப்படி

ரூபா 15 எங்கும் விற்பனையாகின்றது. 22.05.03 - சனிமாற்றம், 23.07.03 - வியாழமாற்றம், 15.08.03 - ராகு-கேது மாற்றம் (எல்லா ராசிப் பலன்களும் அடங்கியன) கணிப்பாசிரியர் PROF சத்தியதாசன் (சத்யா) ருக்குமணி புத்தகசாலை, புதுக்குடியிருப்பு. (7757)

# இலவச ஆங்கில மொழிப்பயிற்சி 2003

வடகிழக்கு கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் இளைஞர் அபிவிருத்திப் பிரிவின் அனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட காரியாலயத்தினால் இலவச ஆங்கில மொழிப் பயிற்சி பாடநெறிகள் முல்லை மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளன.

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் குமுழமுனை மகா வித்தியாலயம், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, உடையார்கட்டு மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் இம்மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை 6 மாத காலத்திற்குப் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் 15-29 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகள் கல்விப் பொதுத்தராதர சா/த ஆங்கிலத்தில் சித்தியடைந்தவர்களும், கல்வி கற்றவர்களும் கலந்து கொள்ளலாம். பயிற்சி பெறவிரும்புவோர் பயிற்சி நடைபெறவுள்ள பாடசாலைகளில் தங்கள் பெயர்களை உடன் பதிவு செய்து கொள்ளுமாறு முல்லைத்தீவு பதில் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ்.சண்முகவடிவேல் கேட்டுக் கொள்கின்றார். (26)

# கரும்புலிகள் நினைவாக விளையாட்டுப் போட்டிகள்

வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் கரும்புலிகள் நாளை முன்னிட்டு வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டி நேற்றில் இருந்து வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. வலைபந்தாட்டப் போட்டி நாளை தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (11)

### கண்ணி வெடி அகற்றுவது தொடர்பான

# கண்டியில் நடைபெற்ற கருத்தரங்கு பொலிசாரின் தலையீட்டால் இடைநிறுத்தம்

கண்ணிவெடிகள் அகற்றுவது தொடர்பாக கண்டி திகன பகுதியில் கருத்தரங்கு ஒன்று நடைபெற இருந்தது. இக்கருத்தரங்கு பொலிஸ் மற்றும் படையினரின் தலையீட்டால் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

யுனிசெவ்வின் அனுசரணையுடன் கடந்த 22ஆம் திகதி இந்தக் கருத்தரங்கு ஆரம்பமாகி 26ஆம் திகதி வரையும் நடைபெறவிருந்தது.

இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

எனினும் கடந்த 23ஆம் திகதி இரவு இந்தக் கருத்தரங்கு நடைபெற்ற ஹோட்டலினுள் சாதாரண உடைகளில் நுழைந்த இராணுவத்தினரும், பொலிசாரும் இந்தக் கருத்தரங்கில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர் எனக் கூறி விசாரணை நடத்த வேண்டும் எனக் கூறினர்.

இதனையடுத்து இந்தக் கருத்தரங்கு குழம்பியுள்ளது.

# காலம் கடந்த பிறப்பு,இறப்புக்களைப் பதிவு செய்யும் அதே இடத்திலான சேவை

இதுவரையும் பதிவு செய்யப்படாத காலங்கடந்த பிறப்பு, இறப்புப் பதிவுகளை பதிவு செய்யும் பொருட்டு வடக்கு-கிழக்கு மாகாண உதவிப்பதிவாளர் நாயகம் அவர்கள் எதிர்வரும் 08ஆம், 09ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகைதர உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் அறியத்தந்துள்ளார்.

எனவே இதுவரையும் பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்யாதவர்கள் உரிய ஆவணங்களை அந்தந்த கிராம அலுவலர்களின் சிபாரிசுடன் பிரதேச செயலாளரின் அறிக்கையையும், பாடசாலை அதிபரின் அறிக்கை, ஊசி அட்டை, சாதகக்குறிப்பு சகோதரர்களது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், பெற்றோரின் திருமணச் சான்றிதழ் என்பவற்றுடன் உரிய பிரதிக்கினைய பூர்த்தி செய்து கீழ்க் குறிப்பிடப்படும் தினத்தில் அந்தந்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இவ் இறுதிச்சந்தர்ப்பத்தை தவறவிடாது சகலருக்கும் இதனை அறிவிக்குமாறு கிராம அலுவலர்கள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

08-07-2003 மு.ப. 9.00 மணி பிரதேச செயலகம் பூநகரி
08-07-2003 பி.ப. 1.00 மணி பிரதேச செயலகம் கண்டாவளை
09-07-2003 மு.ப. 9.00 மணி பிரதேச செயலகம் கரைச்சி.

**நா. செல்வராசா**
**மேலதிக மாவட்டப் பதிவாளர், கிளிநொச்சி.**

(சி-8197)



# லைபீரியாவில் அமைதியை நிலைநாட்ட அமெரிக்கா தொடர்ந்து பின்னடிப்பு!

லைபீரியாவுக்கான அமைதி காக்கும் படையை வழிநடத்துவதற்கான திடமான உறுதிமொழியை வழங்காமல் அமெரிக்கா தவிர்த்து வருகின்றது.

தற்போது நிலைமையை விரிவாக ஆராய்ந்து வருவதாகவும் அமைதியை நிலைநாட்டுவதில் எவ்வாறு பங்களிக்கலாம் என்று சிந்தித்து வருவதாகவும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

லைபீரியாவில் சனாதிபதி சார்ள்ஸ் ரெயிலருக்கு விசுவாசமான படைகளுக்கும் அவரைப் பதவி கவிழ்க்கப் போராடும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்று வருகின்றது. இந்த விவகாரத்தில் தலையிட்டு சண்டைக்கு முற்றுப்புள்ளி வைப்பது பற்றி ஐக்கிய நாடுகள் சபை சிந்தித்து வருகின்றது.

லைபீரியாவுக்கான அமைதி காக்கும் படைக்கு அமெரிக்கா தலைமை வகிக்க வேண்டும் என ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனான் வலியுறுத்தியுள்ளார்.



அமெரிக்காவின் நாசகாரிக் கப்பல். இராணுவ செலவுக்குத் தாய்வான் நிதியொதுக்காததால் இத்தகைய நாசகாரிகளை விற்பதை அமெரிக்கா நிறுத்தியுள்ளது.

# அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோருவோர் மோசமாக நடத்தப்படுவதையிட்டு ஆட்சேபம்!

## பிரதமருக்கு மன்னிப்புச்சபை நிர்ப்பந்தம்

**அவுஸ்திரேலியாவிற்கு புகலிடம் கோரி வரும் வெளிநாட்டவர்கள் மீது அவுஸ்திரேலிய அரசாங்கம் கடைப்பிடித்துவரும் இறுக்கமான நடைமுறைகளை மனித உரிமை அமைப்புக்களில் ஒன்றான சர்வதேச மன்னிப்புச் சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.**

பசுபிக் தீவுகளில் இவ்வாறு அகதிச் சிறுவர்கள் பலர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த மனித உரிமை அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பிராந்தியத்திற்கான உயரதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவார்ட்டை நேரில் சந்தித்து இது குறித்து தமது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது. முன்னதாக இவர்கள் பிரதமரின் வாசஸ்தலத்திற்கு ஊர்வலமாகச் சென்று சந்திப்பை மேற்கொண்டனர்.

, அவுஸ்திரேலியாவுக்குப் புகலிடம் கோரி வருகின்ற அனைத்து நபர்களையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் பின்தங்கிய முகாம்களில் அடைத்துவைத்து மோசமாக நடத்துவதாக குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே எழுந்துள்ளன.

பெண்கள், சிறுவர்கள் என்ற பாரபட்சம் இவர்கள் மீதுகாட்டப்படுவதில்லை. இந்த நடைமுறைகளை மனித உரிமை அமைப்புக்களும், ஐக்கிய நாடுகள் சபையும் வெகுவாகக் கண்டித்துள்ளன.

இதேசமயம் புகலிடம்கோருவோர் விடயத்தில் பிரதமர் ஜோன்ஹவார்ட் தலைமையிலான அரசாங்கம் தொடர்ந்தும் இறுக்கமான நிலையையே கடைப்பிடித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## விமான விபத்தில் பதினைந்து பேர் பலி

அல்ஜீரியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத்தில் 15பேர் பலியாகியுள்ளனர். பலியானவர்களில் ஏழு பேர் சிறுவர்கள். அல்ஜீரிய நாட்டுப் படைகளுக்குச் சொந்தமான இந்த விமானம் மக்கள் குடியிருப்புப் பகுதியில் வீழ்ந்து நொருங்கியதாலேயே இந்த அனர்த்தங்கள் நிகழ்ந்துள்ளன. படைநிலை ஒன்றில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே வீழ்ந்து நொருங்கியுள்ளது.



மேற்குக் கரை கிராமமொன்றையும் ஜெருசலேமையும் பிரிக்கும் மதிலின் அருகே விளையாட்டில் ஈடுபடும் பலஸ்தீன சிறுவர்கள்.

## மீண்டும் ஒத்திவைப்பு

செவ்வாய்க் கிரகத்துக்கு 'றோபோ' வொன்றை அனுப்பும் திட்டம் நாசாவினால் மேலும்பிற்போடப்பட்டுள்ளது. 'டெல்ரா-2' என்ற றொக்கட்டை திருத்துவதற்கு காலஅவகாசத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அனுப்பப்பட்ட 'றோபோ'வுடன் இணைந்து செவ்வாய்க்கிரகத்தில் நீர் இருக்கின்றதா என்பதை அது ஆராயும். அனேகமாக இந்த றோபோ எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விண்வெளிக்கு அனுப்பப்படலாம் என நாசா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தாக்குதலில் காயமடைந்த சிரியப் படையினர் ஒப்படைப்பு

அமெரிக்கப் படையினரின் தாக்குதலின் போது காயமடைந்த ஐந்து சிரிய எல்லைப்படைபடையினரை அமெரிக்கா ஒப்படைத்துள்ளதாக சிரியா தெரிவித்துள்ளது.

அண்மையில் ஈராக் சிரியா எல்லைப்புறத்தில் சென்ற வாகனத் தொடரணி ஒன்றின் மீது அமெரிக்க-பிரிட்டிஷ் கூட்டுப்படையினர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

சதாம் ஹுசைனும் அவரது புதல்வர்களும் சென்றதாகக் கருதியே இந்த வாகனத்தொடரணி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

காயமடைந்த இவர்களை சிரியாவிடம் ஒப்படைக்காது அமெரிக்கா தன்வசம் வைத்திருந்தது. இது குறித்து சிரியா கண்டனம் தெரிவித்ததை அடுத்தே இவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.



பலூயா நகரில் அமெரிக்கத் தாக்குதலில் சேதமாக்கப்பட்ட வாகனத்தை அவதானிக்கும் ஈராக்கியர்கள்(இத்தாக்குதலில் 3 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்.)

# பயங்கரவாதத்திற்கெதிரான ஒப்பந்தத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் கைச்சாத்து

பயங்கரவாதத்தை எதிர்த்து சர்வதேச ஒப்பந்தமொன்றில் ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் கைச்சாத்திட்டுள்ளன.

பேரழிவு ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கைக்கு இருதரப்பும் ஒத்துழைப்பு வழங்குவதாக ஒப்புக் கொண்டுள்ளன.

அதேவேளை வடகொரியா, ஈரான் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வதாக இருதரப்பினரும் அறிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத் தூதர்களுடனான சந்திப்பினை அடுத்து அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் உரையாற்றுகையில் குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் சர்வதேச ரீதியில் எழுந்துள்ள பயங்கரவாதத்துக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் இணைந்து செயற்படுவதாக முடிவுசெய்துள்ளது என்றார்.



பாக்தாத்தின் வடகிழக்கில் கிராமம் ஒன்றில் ஆயுதக்களைவு நடவடிக்கையில் ஈடுபடும் அமெரிக்க இராணுவம்.

## புஷ்-மண்டேலா சந்திப்பு இல்லை!

அடுத்தவாரம் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்யும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் முன்னாள் சனாதிபதி நெல்சன் மண்டேலாவைச் சந்திக்கமாட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளையர்களின் ஆதிக்கத்தில் இருந்த தென்னாபிரிக்காவை மீட்டெடுத்து பல இனத்தவர்களும் அங்கம் வகிக்கும் சனநாயகத்தை உருவாக்கியவர் இந்த மூத்த தலைவராவார். இவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசும் கிடைத்தது. ஆனால் நெல்சன் மண்டேலா ஈராக்கை ஆக்கிரமிப்பு செய்தமைக்காக அமெரிக்காவைக் கடுமையாக விமர்சித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அயோத்தியில் மசூதி அமைக்க நாம் அனுமதிக்க மாட்டோம்

## விஸ்வ ஹிந்து பரிஷத்

(புதுடில்லி)

அயோத்திப் பிரச்சினை குறித்து ஆர்.எஸ்.எஸ், விஸ்வஹிந்து பரிஷத் என்பன கூறியுள்ள கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்கள் என பா.ஜ.கட்சி செய்தித் தொடர்பாளர் முப்தால் அபாஸ் நசி நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

அயோத்தில் இராமர் கோயில் கட்ட வேண்டும் என விஸ்வ ஹிந்து பரிசட் விரும்பினாலும் அது பேச்சுவார்த்தை மூலமோ அல்லது நீதிமன்றத் தீர்ப்பு மூலமோ தான் நிறைவேற வேண் டும் என உறுதியுடன் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். ஆனால் அயோத்தியில் நான்கு கிலோ மீற்றருக்குள் மசூதி அமைக்க அனுமதிக்கமாட்டோம் என விஸ்வஹிந்து பரிஷத் அமைப்பின் பொதுச் செயலாளர் பிரவீன் தொகாடியா வலியுறுத்திக் கூறியுள்ளார்.

## காஷ்மீர் பகுதியில் மோதல் மேஜர் உட்பட 09 பேர் பலி!

(புதுடில்லி)

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர்- பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இராணுவ மேஜர் ஒருவரும் மற்றும் எட்டு பொதுமக்களும் பலியாகினர். வடக்கு ஜம்முவில் இருந்து 170 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நாயூரி எனும் இடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்திலேயே இவர்கள் பலியானதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இமாலயப் பகுதியில் 28ம் திகதி இடம்பெற்ற இராணுவ முகாம் தாக்குதலை அடுத்து பிரிவினைவாத இயக்கமொன்று மேற்கொண்ட இரண்டாவது தாக்குதல் இதுவாகுமெனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சிங்கள இனவாதிகளும் "நாட்டுப்பற்றும்"

- நாட்டின் அதியுயர் பீடமான பாராளுமன்றம் இன்று கேடிகளின் கூடாரமாகிவிட்டது.

  - அஸ்கிரிய பீடாதிபதி சீற்றம்

- சிறிலங்காவில் தினமும் 50 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் பாவனையில்...

  ஒரு லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் சிறைச்சாலைகளுக்குள் விற்பனை.

- மதுப் பாவனையில் உலகில் சிறிலங்காவுக்கு 2ஆம் இடம்.

- பழைய களனிப் பால சோதனைச் சாவடியிலிருந்த பொலிசாரிடமிருந்து போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

- சு.க. - ஜே.வி.பி. கூட்டணிக்கு நாட்டுப் பற்றாளர் மக்கள முன்னணி எனப் பெயரிடப்பட்டது.

  - ஜே.வி.பி. செயலாளர் விமல் வீரவன்ச.

சிறிலங்கா மற்றுமொரு ''தேசப்பற்றாளர்'' கூட்டு ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகரித்து வருவதாக



தகவல்கள் கூறுகின்றன. புலிகளால் நாட்டுக்கு ஏற்படக் கூடிய அபாய நிலையைக் கருத்திற் கொண்டு இந்தக் கூட்டிணைவு ஏற்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. புலிகளுக்கு ஐக்கிய தேசிய முன்னணி ஈழத்தைத் தாரைவார்த்துக் கொடுக்கப் போவதாகவும் அத் தேசப்பற்றாளர்கள் கூக்குரல் இடுகின்றனர். ஆனால் இந்தக் கூட்டில் உயர் பதவியைப் பெறுவதிலான இழுபறியும் நிலவுவதாக சில தகவல்கள் கூறுகின்றன.

எவ்வாறாயினும் உருவாகப் போகும் புதிய கட்சி நாட்டுப் பற்றாளர்களின் சங்கமமாக இருக்கும் என அவர்கள் நம்புகின்றனர். இதில் புலிகளுக்கெதிரான சக்திகளை ஒன்றிணைப்பது அவர்களின் நோக்கமாகும். இதில் டக்ளஸ் தேவானந்தா கூட இணைக்கப்பட அவர்கள் சம்மதமே.

இவர்களுக்கு தேசப்பற்றுக் கொண்ட பௌத்த பிக்குகள் பலர் ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்றனர். அண்மையில் இந்த நாட்டுப் பற்றாளர்கள் முன்னணி நடத்திய இடைக்கால நிர்வாக சபைக்கும், சமாதான நடவடிக்கைகளுக்கும் எதிரான போராட்டங்களில் பெருமளவான பௌத்த பிக்குகள் கலந்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு பௌத்த பிக்குகள் "தேசப்பற்றுக்" கொண்டு அரசியலில் குதிப்பதும் போராட்டம் நடத்துவதும் சிறிலங்காவின் வரலாற்றில் புதியதொன்றல்ல. 2500 வருடங்கள் பழமை வாய்ந்த பௌத்தத்தை தத்தெடுத்துக் கொண்ட சிறிலங்கா ஒரு தூய பௌத்த சிங்கள நாடாகவே இருக்க வேண்டும் என்பதில் இவர்களுக்கு "அதீத அக்கறை" உண்டு என்பதை இவர்கள் பல தடவைகள் நிரூபித்துக் காட்டியிருக் கிறார்கள்- நிரூபித்துக் காட்டியும் வருகிறார்கள்.

சிறிலங்காவின் முதலாவது சுதந்திர நிகழ்வில் பிரித்தானியக் கொடி இறக்கப்பட்டு பௌத்தக் கொடி ஏற்றப்பட வேண்டும் எனப் போராட்டம் நடத்தியதிலிருந்து சிறிலங்காவின் "சுதந்திர வரலாற்றில்" இவர்கள் நடத்திய போராட்டங்கள் பல.

தமிழ் மக்களுடைய உரிமைகளை மறுத்து சிறிலங்காவில் நடத்தப்பட்ட போராட்டங்களில் முன்னணியில் நிற்பவர்கள் பௌத்த பிக்குகள். சிறிலங்காவை ஆட்சி புரிந்த இரு பெரும் கட்சிகளாயினும் சரி இடதுசாரி மாக்சீய வாதிகளான ஜே.வி.பி. யினரும் சரி "நாட்டுப் பற்றுக்" கொண்டு நடத்தும் போராட்டங்களில் இவர்களை முன்னிறுத்தியே நடத்துவது வழமை.



இதேவேளை,ஆட்சிப்பீடமேறும் தலைவர்கள் பதவியைப் பொறுப் பேற்றதும் ஆசியும் ஆலோசனையும் பெறச் செல்வது மகாநாயக்க தேரர்களிடம் தான். இதில் ஐ.தே.க.வினர் என்றால் முதலில் அஸ்கிரியபீடாதிபதியிடமும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் என்றால் மல்வத்த பீடாதிபதியிடமும் சென்றாலும் இவ்விரு பீடாதிபதிகளின் ஆசியின்றி எவருமே ஆட்சி நடத்துவதில்லை. அது மட்டுமல்லாது நாட்டின் முக்கிய விவகாரங்களை அவ்வப்போது நேரில் சென்று பீடாதிபதிகளுக்கு விளக்காமல் இருந்ததில்லை.

யுத்த காலத்தில் என்றால் மகாநாயக்கர்களின் ஆசிபெற்று பிரித்நூல் கட்டியே இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆட்சியைப் பொறுப்பேற்கும் அரசியல் வாதிகள் மட்டுமல்ல, முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட அனைத்து உயரதிகாரிகளும் - அவர்கள் எம் மதத்தைச் சேர்ந்தோராயினும்-பீடாதிபதிகளின் ஆசியைப் பெறுவது வழமை.

அதுமட்டுமல்ல நாட்டுப்பற்றில் தம்மை விஞ்சியவர்கள் எவருமில்லை என மார்தட்டும் சிகலஉறுமய (சிங்களவர் உரிமை)வின் முக்கிய தூண்களாக பௌத்த பிக்குகளே விளங்குகின்றனர். இக்கட்சி நடத்திய சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையை ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென பௌத்த காங்கிரஸ் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அரசியலில் செல்வாக்கும் அதீத "நாட்டுப்பற்றும்" கொண்டவர்களாக சிறிலங்காவில் உள்ள பௌத்த பிக்குகள் விளங்கு வது வெளிப்படையான விடயமாகும். ஆனால் இவர்களின் நாட்டுப்பற்று எத்தகையது? என்றும் இவர்களின் போராட் டங்கள் எவற்றுக்கானது என்றும் கேள்வி எழுப்பினால்..?

பௌத்த-சிங்களத்திற்கு "ஆபத்து" ஏற்படும் போதே இவர்களின் நாட்டுப்பற்று கிளர்ந்தெழுகின்றது. இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மையின மக்கள் தமது உரிமைகளைக் கோருவது சிங்கள பௌத்தத்திற்கும் இந்தநாட்டிற்கும் ஆபத்தானது என்பதும் அதற்கு எதிராக மகாவம்சக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும் இவர்களது உறுதியான கொள்கையாகும். இதனையே அவர்கள் நாட்டுப்பற்று என்று கருதுகிறார்கள்.

ஆனால் பௌத்தம் கூறும் பஞ்சசீலம் சிறிலங்காவில் சீரழிவது குறித்துக் கவனிக்க இவர்களுக்கு நேரமில்லை. அது குறித்து அவர்கள் சிந்திப்பதுமில்லை. இதனால்சிறிலங்கா எனும் நாடு அழிந்து போவது குறித்தும் அவர்களுக்குக் கவலையில்லை.

அண்மையில் சிறிலங்காவின் பாராளுமன்றம் குறித்து அஸ்கிரிய மாநாயக்கர் ஒரு கருத்தைக் கூறியிருந்தார். அதாவது பாராளுமன்றம் கேடிகளின் கூடாரமாகிவிட்டது என்றும் பாராளுமன்றத்தில் ஒழுக்கம் இன்று சீரழிந்த நிலையில் உள்ளது என்றும் குற்றச் செயல்களைப் புரிவோரை ஆதரிக்கும் நபர்களை மக்கள்தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்றும் தெரிவித்தார். ஆனால் இவ்வாறான பா.உ.களுக்கெல்லாம் ஆசி வழங்குபவர்கள் யார்? அவ்வாறு குற்றச் செயல்களைப் புரிவோருடன் தொடர்புடைய பாராளுமன்ற உறுப்பினர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக இவர்கள் எத்தனை போராட்டம் நடத்தியிருக்கிறார்கள்?

கடந்த பல வருடங்களாக குறிப்பாக கடந்த 30 வருடங்களுக்குமேலாக நடைபெறும்தேர்தல்கள் வன்முறைகள் மிக்கதாகவே இருந்து வருகின்றது. இந்தவன்முறைகள் போக்கு அதிகரித்துச் செல்லும் போக்கிலேயே இருப்பதை எவரும் மறுக்கமுடியாது. இவ்வாறு வன்முறை வழியால் வாக்குப்பெற்று ஆட்சியமைக்கும் அரசியல் தலைவர்களுக்குக் குறைந்த பட்சம் ஆசிவழங்க மாட்டோம் என்றாவது இவர்கள் உறுதியெடுத்தார்களா? இவ்வாறான நிலையில் மக்கள் இவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று கூறுவதற்கு எந்த அருகதையும் இவர்களுக்கு இல்லை. அதேவேளை இங்கு அவர்களின் நாட்டுப்பற்றும் புலப்படுகிறது.

சிறிலங்காவில் தினமும் 50 இலட்சம் ரூபா பெறுமதியான

**- வேலவன் -**

போதைப்பொருட்கள் விற்பனையாகின்றன. மது பாவனையில் சிறிலங்கா உலகில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது என அண்மையில் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

ஒரு பௌத்த பிக்கு சொன்னார் 'சிறிலங்காவில்இன்று என்ன நிகழ்வு என்றாலும் மது இல்லாது பார்க்க முடியாது கலந்து கொள்ளும் அனைவரும்போதையிலேயே இருக்கின்றனர். மரண வீட்டுச்குச் சென்றால் கூட பிணத்தைத் தவிர அனைவரும் போதையில் மிதக்கின்றனர்'என்று சிறைச் சாலைகளுக்குள் கூட தினமும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் விற்பனையாகின்றனவாம்.

இந்தச் சீரழிவு நிலையைத்தவிர்க்க ' நாட்டுப்பற்றுள்ள' பௌத்த அமைப்புக்கள் என்ன செய்கின்றன?அவர்களுக்கு இந்தப்போதைப் பொருட்களால் ஏற்படும் அழிவுகள் குறித்து மக்களுக்குப் போதிக்க வேண்டிய கடமை இல்லையா? இப்போதைப் பொருள் பாவனையாளர்களில் பெரும்பாலானோர் இளம் சமுதாயத்தினரே. அவ்வாறாயின் அவர்கள் பற்றுக் கொண்டுள்ள நாட்டின் எதிர்காலம் என்ன?

இவ்வாறு சிங்களச் சமுதாயமும் அதன் எதிர்காலமும் சீரழிந்துகொண்டு செல்கையில், பௌத்தத்துக்கும் அதன் போதனைகளுக்கும் எதிராகப் பௌத்த சிங்களச் சமூகமே இருக்கையில் தமிழர்களிடமிருந்து "பௌத்த சிங்கள நாட்டைக் காப்பது" தான் நாட்டுப் பற்று என இவர்கள் கருதுவது எவ்வளவு மடமை?

## திருட்டுப் பொருட்களுடன் ஒருவர் சிக்கிக் கொண்டார்

(உடையார்கட்டு)

வள்ளிபுனம், உடையார்கட்டுப் பகுதிகளில் பல திருட்டுச் சம்பவங்களில் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் கடந்த சனியன்று மதியம் 1.30 மணியளவில் திருடப்பட்ட சில பொருட்களுடன் வள்ளிபுனம், உடையார்கட்டு வலயப் பொறுப்பாளர், மனித வள அலுவலர் ஈசன் ஆகியோரிடம் வசமாகச் சிக்கினார்.

துவிச்சக்கரவண்டி, தோட்டங்களில் மிளகாய், வாழைக்குலை உட்பட பல பொருட்கள் என திருட்டுப் போன சம்பவங்களுக்கு காரணமானவர் இவர் எனக் கருதப்படுகிறது. மேல் விசாரணை நடவடிக்கைகளுக்காக இவர் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (19)

## புலிகளின் கோரிக்கைக்கு பணியாமல் அரசு பேச்சுக்களை நடத்த வேண்டும்!

**- பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினரின் அறிவுரை**

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளுக்கு பணிந்து போகாமலும் நாடு பிளவுபடாத வகையிலும் விடுதலைப் புலிகளை அழைத்து அரசாங்கம் பேச்சுக்களை நடத்த வேண்டும் என பொதுசன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா பத்திரிக்கையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, அமைச்சர் பீரிஸ் வார்த்தைகளால் மட்டுமே முன்னேற்றம் பற்றி கூறுகிறாரேயொழிய செயற்பாட்டின் மூலம் அவரிடம் எதிர்ப்பார்க்கப்படுவது பூச்சியமே. புலிகள் யுத்த நிறுத்தத்தின் பின் பல மீறல் சம்பவங்களை மேற்கொண்டுள்ளனர். இதைப் பற்றி அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் வெள்ளை பூசி வருகிறது.

விடுதலைப்புலிகளின் கொலைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை விடுத்து சர்வதேச சமூகத்துக்கு இதனை சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறெனினும் நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்பை அரசு பலப்படுத்தியிருக்கிறது. மிலிந்த மொறகொடவின் வீட்டின் மேல் பீரங்கியொன்று பொருத்தப்பட்டிருக்கிறது. இதற்கு அனுமதியளித்தது யார் எனவும் அவர் வினாவெழுப்பியுள்ளார்.

-நிமலராஜன் கொலை வழக்குத் தொடர்பாக-

## யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள் பிணையில் விடுதலை

(வடமராட்சி)

ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவரையும் நிபந்தனையுடன் கூடிய பிணையில் யாழ். மாவட்ட நீதவான் ஆர்.ரி. விக்னராஜா விடுதலை செய்துள்ளார்.

ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த காராளசிங்கம் சிந்துபரன், மற்றும் ஜெகன் எனப்படும் கந்தசாமி ஜெகதீஸ்வரன் ஆகிய இருவருமே வவுனியா மேலதிக நீதிமன்ற அனுமதியுடன் யாழ். மாவட்ட நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டனர் இவர்கள் இருவரையும் தலா ஐம்பதாயிரம் ரூபா பிணையிலும் நிரந்தர வதிவிடமுடைய இரு ஆட்பிணையிலும் விடுதலை செய்த நீதவான் சாட்சிகளை அச்சுறுத்தக் கூடாது எனவும் ஒவ்வொரு மாத இறுதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் யாழ். பொலிஸ் நிலையத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

இதேவேளை மேற்படி கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்த இரு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் ஏற்கனவே பிணையில் விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

## வவுனியாவில் வீரமுரசு!

(வவுனியா)

வவுனியாவில் வீரமுரசு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இரவு ஒன்பது மணியளவில் குருமன்காடு கலைமகள் மைதானத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பேபி ஆசிரியரின் சங்கநாதம் ஆற்றுகைப்படுத்தப்பட்டது.

# யுத்த நிறுத்தமும், பாதை திறப்பும் எதற்காக...

# பௌத்த தேசிய வாதத்தை வளர்த்தெடுக்கவா!

யுத்த நிறுத்த உடன்பாடும், சமாதானப் பேச்சுவார்த்தைகளும், ஏ-9 பாதை திறப்பும் எதற்காக என்ற கேள்விகளுக்கு பதில் காண வேண்டிய தேவையானது தமிழ் மக்களுக்கு மீண்டும் எழத்தொடங்கியுள்ளது. ஏனெனில், தமிழர் தாயகப் பகுதியில் குறிப்பாக யாழ். குடா நாட்டில் அண்மைய நிகழ்வுகள் சில இத்தேவையை உருவாக்குபவையாகவுள்ளன.

ஏ-9 பாதை திறப்பானது துண்டாடிப் போயிருந்த இலங்கையை மீள இணைத்த தானதொரு நடவடிக்கை, சாதனை என அரசாங்கத்தரப்புக் கூறிக் கொள்வதுண்டு. அதில் ஓரளவு உண்மையில்லாமலும் இல்லை. இதன் காரணமாக கேள்விக்குள்ளாகியிருந்த இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு என்பன மீண்டும் ஏற்படுத்தப்பட்டதாகவும் அரசாங்கம் பெருமை பேசுவதற்கு வாய்ப் புண்டு.

ஆனால், யுத்த நிறுத்தமும், சமாதானப் பேச்சுவார்த்தைகளும் மறுபுறத்தில் நிறைவேற்ற வேண்டிய விடயங்களும் பல உண்டு. அதாவது தமிழ் மக்களின் அன்றாட-அத்தியாவசியத் தேவைகள், புனர்வாழ்வு புனரமைப்புப்பணிகள், அவற்றிற்கும் மேலாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலான அதிகாரப் பரவலாக்கல், அதாவது சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆழக்கூடிய அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய ஆட்சிமுறை.

இருப்பினும் யுத்த நிறுத்தஉடன்பாடு மேற்கொள்ளப்பட்டு பதினாறு மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும், யுத்த நிறுத்த உடன்பாட்டில் இணக்கப்பாட்டிற்கு வந்த விடயங்களைக் கூட அரசாங்கம் முழுஅளவில் நிறைவேற்றவில்லை. மக்கள் குடியிருப்புக் களில் இருந்து இராணுவம் இன்னமும் வெளியேறவில்லை. இராணுவம் நிலை கொண்டுள்ள பொதுக்கட்டடங்கள், வணக்க ஸ்தலங்கள் என்பனவற்றை மக்களின் பயன் பாட்டிற்கும், உபயோகத் திற்கும் இராணுவம் அனுமதிக்கவில்லை.

இவை ஒருபுறம் இருக்க சுமார் இரு தசாப்த காலமாக யுத்தத்தினால் பெரும் இன்னலுற்ற மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்யக்கூடிய புனர் வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் அரசாங்கம் தீவிரம் காட்டவில்லை. மாறாக இராணுவ நலன்களையும் சிறிலங்கா அரசின் நலன்களையும் முன்னிலைப்படுத்து வதிலேயே அக்கறை காட்டுவதாக உள்ளது.

இந்த வகையில், யுத்த நிறுத்தமும் - ஏ-9 பாதை திறப்பும் பௌத்த-சிங்கள தேசியத்தின் இருப்பு இலங்கை பூராவுக்குமானது என்ற ரீதியில் அரசாங்கத்தினதும், பௌத்த-சிங்கள அடிப்படைவாதிகளினதும் நடவடிக்கைகள் முனைப்புப் பெற்றதாகியுள்ளது. அதாவது இலங்கை பௌத்த-சிங்கள நாடு-இலங்கையின் தேசியம் என்பது பௌத்த-சிங்களத் தேசியமே என்பது போன்ற தோற்றப்பாட்டை நிலைநிறுத்துவதாகவே அரசாங்கத்தினதும், பௌத்த-சிங்கள அடிப்படைவாதிகளினதும் நடவடிக்கைகள் உள்ளன

இத் தேசியத்தின் இருப்பை அவர்கள் பௌத்த விகாரைகளுக்கான தல யாத்திரிகைகள் மூலம் உறுதி செய்ய விளைகின்றனர். இதன் வெளிப்பாடாகவே ஏற்கனவே பிரபலமாகியுள்ள நயினாதீவு நாகவிகாரை , கந்தரோடை அகழ்வாராய்ச்சி பகுதி என்பனவற்றை மையமாகக்கொண்டு தமது தல யாத்திரை சுற்றுலாவை அமைத்துக் கொள்ள முற்பட்டு நிற்கின்றனர். ஏ-9 பாதை திறப்பானது இவர்களுக்குப் பேருதவியாகியுள்ளது.

இதற்கென பழைய விகாரைகளுக்கு புதுப் பொலிவூட்டவும் புதியவற்றை தோற்றுவிப்பதிலும் முழு அளவில் அக்கறை காட்டுகின்றனர். இவற்றின் இயங்கு சக்தியாக பௌத்த-சிங்கள அடிப்படை வாதிகள், அரச படைகள், ஆட்சியாளர்கள் ஆகியோர் உள்ளனர். இவர்களின் கூட்டிணைவான நடவடிக்கையானது இலங்கைத் தீவானது பௌத்த-சிங்களவர்களுக்கு மட்டுமே உரியதென்பதை வலியுறுத்துவதாயுள்ளது. இந்த ரீதியிலேயே யாழ். குடா நாட்டை இராணுவம் கைப்பற்றியதும் மக்களுக்காக புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாகவே சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட புனரமைப்பு நடவடிக்கையானது யாழ். நகரில் இருந்த நாகவிகாரையைப் புனரமைப்புச் செய்தமைதான். இப்புனரமைப்புப் பணியானது, ஒருவகையில் அப்பகுதியில் ஒரு விகாரை இருந்தது என்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்டதாயினும், அவ்விகாரையானது முன்னர் இருந்ததை விடப் பெரியதாகவும், முக்கியத்துவம் மிக்கதாகவும் ஆக்கப்பட்டமையானது; பௌத்தத்தின் ஆக்கிரமிப்பையே வெளிப் படுத்துவதாக அமைந்துள்ளது.

அத்தோடு, அவ்விகாரைக்கு முன்னால் இருந்த பெரியதொரு கட்டடமும் சுவீகாரம் செய்யப்பட்டுவிட்டது. இக்கட்டடம் இன்று விகாரையின் தேவைக்கும் யாத்திரீகளாக அங்கு செல்லும் பௌத்த சிங்களவரின் பயன் பாட்டிற்கொன்றானதாகவும் மாறியுள்ளது. இந் நடவடிக்கையானது, ஆக்கிரமிப்பின் வெளிப் பாடு என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமே இல்லை.

இதற்கு அடுத்ததாக கந்தரோடையில் அகழ்வாராய்ச்சியின் போது காணப்பட்ட ஒரு 'சமாதி புத்தரின்' சிலையினைக் கொண்டு அதனை பௌத்தர்களின் புனித இடமாகவும். வணக்கத்திற்குரியதாகவும் காட்டவிளையும் பௌத்த-சிங்கள ஆட்சியாளர்களும், அடிப் படைவாதிகளும் கந்தரோடையில் பௌத் தர்களின் வழிபாட்டிற்குரிய ஒரு ராஜமகா விகாரை இருந்ததாக ஒரு நிலையைத் தோற்றுவிக்க முனைந்துள்ளனர்.

அதாவது சமாதான உடன்பாடும், ஏ-9 பாதை திறப்பும் அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தை வழங்குவதாயுள்ளது. ஏற்கனவே கந்தரோடை குறித்து புனை கதைகள் பேசிவந்த பௌத்த-சிங்கள பேரினவாத சக்திகளுக்கு, யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவம் நிலை கொண்டிருப்பதும் போக்குவரத்திற்கான பாதை திறந்திருப்பதும், அங்கு ஒரு ராஜமகா விகாரை கட்டும் அளவிற்கு தூண்டுதலை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு, இன்று யாழ். குடாநாட்டிற்குச் செல்லும் பௌத்த-சிங்கள யாத்திரிகர்கள்/ சுற்றுலாப் பயணிகள் நயினாதீவு நாக விகாரைக்கு அடுத்ததாக செல்லும் ஒரு மையமாகக் கந்தரோடை புதை பொருள் அகழ்வுப் பகுதி மாறியுள்ளது. இதற்கான ஏற்பாட்டு மையமாக யாழ். நாக விகாரை அமைந்துள்ளது. இதன் பிரதம பிக்கு இதில் முக்கிய பங்காற்றுபவராக உள்ளார்.



கந்தரோடை தொல்பொருள் ஆய்வுப் பகுதி

இந்த வகையில் இறுதியாக பௌத்த-சிங்கள அடிப்படைவாதிகளும் அரசாங்கமும் மேற்கொண்டுள்ள முயற்சியே நயினாதீவிலுள்ள விகாரைக்கு அண்மையாகப் பிரமாண்டமான தொரு புத்தர் சிலையை நிர் மாணிப்பதற்கான நடவடிக்கையாகும். இந்நடவடிக்கையானது திருமலை நகரின் பார்வையில் இருந்து கோணேஸ்வர ஆலயத்தினை மறைத்ததாக அமைக்கப்பட்டுள்ள பாரிய புத்தர் சிலையை நினைவு படுத்துவதாகவுள்ளது.

நயினாதீவில் சிலையமைப்பு நடவடிக்கையானது பௌத்த அடிப்படைவாதிகளின் திட்டமாக இருப்பினும் கூட, இதில் அரசாங்கமும் முழு அனுசரணை வழங்கியுள்ளது என்பது இவ் சிலை அமைப்பிற்கான அடிக்கல்லை அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன நாட்டி வைத்துள்ளமை வெளிக்காட்டுவதாய் உள்ளது. தமிழ் மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கு முன்பாக புதிய சிலை அமைப்பு ஆட்சியாளர்களும், பௌத்த சிங்களவர்களுக்கும் அடிப்படைத் தேவை யாகியுள்ளது.

சிங்கள அரசியல்வாதிகளினதும், பௌத்த-சிங்கள அடிப்படைவாதிகளின் இந்நடவடிக்கைகள் சுமார் 20 வருடகாலம் இடம்பெற்ற கடுமையான ஆயுதப் போராட்டமும், சிந்தப்பட்ட இரத்தமும் கூட அவர்களின் சிந்தனைப் போக்கை மாற்றவில்லை என்பதை வெளிப்படுத்தும் ஒன்றாகவே கொள்ளத்தக்கதாகவுள்ளது. அல்லாதுவிடில், இத்தகைய நடவடிக்கைகளை முனைப்புப் படுத்துவதில் அவர்கள் அக்கறை காட்ட முற்பட்டிருக்கமாட்டார்கள்.

இலங்கை சுந்திரம் பெற்றபோது தமிழ் மக்கள் தனிநாடு கோரவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் வாழ முடியும் என்ற நம்பிக்கையே கொண்டிருந்தனர். ஆனால். 1956இல் அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்க கொண்டுவந்த 'சிங்கள மட்டும்' மசோதா இலங்கையில் தமிழ் மொழியை இரண்டாம் தரமொழியாக்கியது. அதாவது சிங்கள் மொழியின் மேலாண்மையைக் கொண்டு வந்தது.

இதன் பின்னர் 1972இல், அப்போதைய பிரதமரும், எஸ். டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்கவின் மனைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்க உருவாக்கிய இலங்கைக்கான முதலாவது குடியரசு யாப்பு பௌத்த மதத்தை அரச மதமாக்கியது. அதாவது ஏனைய மதங்களை இரண்டாம் தர மதங்களாக்கியது.

இந்த வகையில்,கணவனும், மனைவியுமாக பௌத்த சிங்களவர்களை நாட்டின் முதற் பிரஜைகள் ஆக்கிய அதேவேளை ஏனைய சிறுபான்மை இனத்தவர்கள், மதத்தவர்களை இரண்டாம் தரப்பிரஜைகள் ஆக்கினர். இவற்றின் விளைவே இலங்கை யில் 20 வருடங்களாக இரத்த ஆறு ஓடக் காரணமாகியது. ஆனால், இவற்றின் பின்பும் பௌத்த-சிங்கள ஆட்சியாளர்கள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வதற்குத் தயாராக இல்லையா? என்பதே தற்போதைய அவர்களின் நடவடிக்கைகளால் எழும் கேள்வியாகும்.

இலங்கையில் பௌத்த-சிங்களவர்கள் பெரும்பான்மையினராக இருக்கலாம். ஆனால். இலங்கை பல இன மக்கள் வாழும் நாடு என்பதை பௌத்த-சிங்களவர்கள் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு அவர்கள் ஏற்றுக் கொள்ளும் பட்சத்திலேயே இலங்கைத் தீவில் அமைதியும், சமாதானமும் நீடித்து நிலவமுடியும்.

இலங்கையின் அரசியலில் ஒற்றையாட்சி முறைகூட ஒருசமயத்தில் வெற்றி அளித்திருக்கக் கூடும். ஆனால் இலங்கையின் பெருபான்மை இனமான பௌத்த-சிங்களவர்கள் ஒரு இனத்தின் ஆட்சி என்ற நிலைப்பாட்டைக் கொண்டிராது, இலங்கை பல இனமக்கள் வாழும் நாடு என்பதையும், அனைத்து மக்களுக்கும் சமஉரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொண்டிருப்பார்களேயானால் அது சாத்தியப் பட்டிருக்கும். ஆனால், பெரும்பான்மை இனமான பௌத்த-சிங்களவர்கள் பெரும் தன்மையுடன் நடந்துகொள்ளவில்லை. இனவாதிகளாகவே நடந்து கொண்டனர்.

ஆனால், பெரும் உயிரழிவிற்கும், பொருளழிவிற்கும் காரணமாக நீடித்த யுத்தத்தின் பின்பும் ஆட்சியாளர்களும், பௌத்த-சிங்கள அடிப்படைவாதிகளும் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாது. அதாவது தமிழர் தாயகப் பகுதியில் பௌத்த-சிங்கள அடையாளங்களைத் தேடவும் அதற்கு கற்பனை வடிவம் கொடுக்கவும் முற்படுவார்களேயானால் இலங்கையின் ஒருமைப்பாடும், ஐக்கியமும் கேள்விக்குறியாவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

அதாவது இலங்கையின் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் யுத்த நிறுத்தமும், சமாதான உடன்பாடும் தற்காலிகமானதாகக் கொண்டு வந்துள்ளதே ஒழிய நீடித்து நிலைக்கக் கூடிய வகையில் கொண்டு வந்ததாகவோ அன்றி நிலை நிறுத்தியுள்ள தாகவோ கொள்வதற்கில்லை. சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் கிடைக்கப்பெறும் போதே இது நிலையானதாகவும், நீடித்து நிலைக்கக் கூடியதானதாவும் அமைதல் சாத்தியமான தொன்றாகும்.

**ஜெயராஜ்**

---

# அனர்த்தங்களை எதிர்கொள்ள பலம்மிக்கதொரு அமைப்பு

*பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவரத் தீர்மானம்*

அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் பலம் மிக்க அமைப்பொன்றை நிறுவுவதற்காக பாராளுமன்றத்தில் சட்ட மூலமொன்றைச் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய முகாமைத்துவ இடர்காலக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதுள்ளது. சனாதிபதியின் தலைமையில் நேற்று சனாதிபதி மாளிகையில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

சனாதிபதியின் தலைமைத்துவத்துடனும், பிரதமரின் உபதலைமைத்துவத்துடனும் இயற்கை அனர்த்த முகாமைத்துவக் குழு செயற்படுகின்றது. இடர்கால முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை உபகுழு மற்றும் அமைச்சின் செயலாளர்கள் மாகாண செயலாளர்கள் இந்த நிறுவனத்தில் உள்ளடக்கப்படவுள்ளனர்.

அமைச்சர் கருஜெயசூரிய அரசாங்கத்தால் இடர்கால முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களைத் தெளிவுபடுத்தினார்.

உள்நாட்டு, வெளிநாட்டு கடன்களும் நன்கொடைகளும் மக்களுக்குச் சென்றடையக் கூடியதாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## கண்டெடுப்பு

சுப்பிரமணியம் விமலேஸ்வரி, தம்பிலுவில் என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

---

இராணுவத்திலிருந்து தப்பியோடி குற்றம்புரியும்

# 30 ஆயிரம் பேரின் செயல்களை உடன் கட்டுப்படுத்த முடியாது

## - மத்திய மாகாண பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடிய சுமார் 30 ஆயிரம் பேர் உட்பட பல்வேறு அமைப்புக்களால் நடத்தப்படும் கொள்ளை, கொலை, கற்பழிப்பு போன்ற குற்றச் செயல்களைக் குறிப்பிட்ட சில தினங்களுக்குள் கட்டுப்படுத்தவோ, ஒழித்துவிடவோ முடியாது என மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் போதிவத்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற பொலிஸ் சேவைத் திறன் மேம்பாடு மற்றும் கொள்கை அபிவிருத்தி தொடர்பான ஒரு நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இவ்வாறு கூறினார்.

இவர் மேலும் கூறுகையில், தற்போது நடைமுறையிலுள்ள விசேட பாதுகாப்புச் செயற்பாடுகளின் மூலம் வெகுவிரைவில் இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் படுவதே எமது நோக்கம் எனவும் தெரிவித்தார்.

# புதுக்குடியிருப்பு நகர் வலயத்தில் சமகால அரசியல் கருத்துரை

புதுக்குடியிருப்பு நகர் வலயத்தில் கர்ணன் திட்டத்தில் மக்கள் பிரச்சினை ஆராய்வும் சமகால அரசியல் கருத்துரை நிகழ்வும் கடந்த 27ஆம் திகதி பி.ப.4.00 மணிக்கு திட்டத் தலைவர் தலைமையில் நடைபெற்றுள்ளது.நிகழ்வில் சமகால அரசியல் கருத்துரையை கோட்ட எழுச்சிப் பேரவைச் செயலாளர் சண்முகநாதன், புதுக்குடியிருப்பு நகர் வலயப் பொறுப்பாளர் இரத்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச பொறுப்பாளர் பிறையாளன் ஆகியோர் நிகழ்த்தினர். (19)

## மேற்பார்வையாளர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

### தமிழீழப் போக்குவரவுக் கழகம்

பின்வரும் தகைமைகள் உடைய ஆண்பாலோர் மேற்படி பணிக்கான விண்ண்ப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள் :-**

அ. கல்வித்தகைமை:- க.பொ.த.(உயர்தரம்) கற்றிருத்தல்

ஆ. அகவை:- 25 தொடக்கம் 40 வரை

இ. உயரம்:- 5அடி 3அங்குலம்.

**குறிப்பு:-**

அ. விண்ணப்ப முடிவுநாள்- 15.07.2003

ஆ. அடிப்படை மாத ஊதியம்

$$\frac{4500\text{-}5700}{10\text{X}110} + 2000 = 6500.00$$

இ. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு 26.07.2003, 27.07.2003 ஆகிய இரு நாட்களில் தமிழீழப் போக்குவரவுக்கழகம் புதுக்குடியிருப்புப் பணிமனையில் நடைபெறும்.

ஈ. நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வி,அகவை என்பனவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.

உ. விண்ணப்பப் படிவங்களை புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி,மல்லாவி,முழங்காவில், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஊ. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பட்டறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-8194)


# காலி மாவட்டத்தில் குண்டுவெடிப்பு

# தப்பியோடிய சிப்பாய்கள் மூவர் பலி!

## - ஆறு பேர் படுகாயம்

(கொழும்பு)

காலி மாவட்டத்தில் ஹபராதுவ என்னும் இடத்தில் வீடொன்றின் அருகே குண்டொன்று வெடித்ததில் ஒருவர் ஸ்தலத்திலும் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் இருவரும் பலியானதுடன் மேலும் அறுவர் படு காயமடைந்துள்ளனர். பலியானோர் இராணுவத்திலிருந்து தப்பியோடிய சிப்பாய்களான சமந்த (வயது-31), அசேல சூரியாராச்சி(வயது-22) லசந்த (வயது-21) ஆகியோராவர்.

மேற்படி சம்பவம் தப்பியோடிய சிப்பாயின் வீட்டினருகிலேயே நடைபெற்றுள்ளது. பின்னர் அங்கு தேடுதல் நடத்திய பொலிசார் குண்டின் பகுதிகளையும் கஞ்சா சுருட்டுகளையும் வாள் ஒன்றையும் பொதிசெய்யப்பட்ட கஞ்சா, பாண்போன்ற உணவுப் பொருட்களையும் கண்டு பிடித்துள்ளனர்.

மேலும் தப்பிவந்த சிப்பாய்களிடம் இருந்த குண்டு வெடித்ததா அல்லது வெளியார் இவர்களை நோக்கி எறிந்துள்ளனரா என்பது பற்றிய விசாரணைகள் தொடர்கின்றன.

சம்பவத்துக்கு சில தினங்களுக்குமுன் இறந்த சிப்பாய்களுக்கும் அருகிலுள்ள தும்புத்தொழிற்சாலையைச் சேர்ந்த சிலருக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டிருந்ததாகப் பொலிசார்தெரிவித்துள்ளனர்.

# 4 மாதத்தில் பொருளாதாரம் 5.5 சதவீதம் வளர்ச்சி

## சிறிலங்கா நிதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டின் முதல் நான்கு காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி கண்டுள்ளது என நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

இக்காலப்பகுதியில் 5.5 சதவீதம் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

பொருளாதாரத்துறையின் சகல பிரிவுகளிலும் இந்த முன்னேற்றம் காணப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் [நிகொட்]

## பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்கான

# விண்ணப்பங்கள் கோருதல்

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உள்ள மேற்படி திட்ட அலுவலகத்தில் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து 14.07.2003 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் "அரசாங்க அதிபர், கச்சேரி, கிளிநொச்சி" எனும் முகவரிக்கு முடிவுத்திகதிக்கு முன்னதாக கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் தவறாது "நிகொட் அலுவலகத்தில் ..................பதவிக்கான விண்ணப்பம்" என பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பதவிகள்:**

### 01. தரவு நிரற்படுத்துனர்:

**தகைமைகள்:**

பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றையுடையவராக இருத்தல் வேண்டும். மொழி,கணிதம்/தூயகணிதம்/ஆரம்ப கணிதம், பௌதீகவியல்/விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் திறமைச்சித்தியுடன் 6-பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வில் கல்விப் பொதுத்தராதர(சாதாரணதர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

மொழி,கணிதம்/எண்கணிதம்,விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் அடங்கலாக ஐந்து பாடங்களில் A அல்லது B தர திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் புதிய பாடத்தில் கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர) பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

இத்துடன்

பல்கலைக்கழகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தாபனம் ஒன்றில் பின்வரும் பகுதிகளில் கணனிப்பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

01. Windows Operating Systems
02. Microsoft Word
03. Microsoft Excel
04. Microsoft Access
05. Internet and E-mail

### 02. தட்டெழுத்தாளர்:

**தகைமைகள்**

மொழி/இலக்கியம் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச்சித்தியும், ஆங்கிலத்தில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தியும் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த.சாதாரண தர/தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் (சா.தர) பரீட்சையில் பெற்றிருப்பதுடன் கணனி, தட்டச்சு வேலைகளில் தேவையான தகைமையும், அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:**

மேற்படி பதவியில் அரச சேவையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தோடு உத்தியோகத்தர்களின் தகைமை அனுபவங்களைக் கருத்திற்கொண்டு 50% க்கு மேற்படாத தொகையும் வழங்கப்படும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-8195)



## 1ஆம் ஆண்டு நினைவாக

தாயின் மடியில் 27 □ 09 □ 1977



தாயக மண்ணில் 02 □ 07 □ 2002

## மேஜர் சகிலா/தமிழிசை

பொறுப்பாளர் பெண்கள் மேம்பாட்டு நிறுவனம்

**(மகாலிங்கம் சந்திரவதனா)**

காரைநகர் - யாழ்.

*தேகம் தேயும் நிலவாய் – தேசம்*
*வேண்டும் என உழைத்த சகிலாவே*
*வீர தீரம் மிகுந்த அறிவுக் களஞ்சியமே*
*சமூக கொள்கையை வளர்க்க*
*உதிரத்தால் உழைத்தவளே*
*நீ நிம்மதியாய் உறங்கு*
*உன் வழியில் எம் விழிகள்.*

இன்றைய நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்,
போராளிகள்.

(சி-8199)



## சிந்தனைக்கு

எந்த ஒரு விடுதலை இயக்கமும் தனியாக நின்று, மக்களுக்குப் புறம்பாக நின்று விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. அது நடைமுறைச் சாத்தியமான காரியமுமல்ல.

தமிழீழத்தேசியத் தலைவர்


ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 02-07-2003


## ஆக்கபூர்வமான பங்களிப்பு?

விடுதலைப்புலிகள் மீது அழுத்தம் பிரயோகிப்பது தேவையற்றது தீர்வை முன்வைக்க வேண்டியவர்களிடமே அழுத்தத்தைப் பிரயோகிப்பது பொருத்தப்பாடானது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஜப்பானியத் தூதுவரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளதன் மூலம் புலிகளின் நிலைப்பாடு குறித்து சில விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளார் என்றே கொள்ளலாம்.

இதில் ஒன்று, விடுதலைப்புலிகள் இயக்கமானது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அப்பால் அழுத்தங்களுக்குப் பணிந்து போகமாட்டாது, அன்றி முடியாது என்பதாகும். அதாவது தமிழ் மக்களின் நலன்கள் பாதிக்கப்படுமானால் எவருடைய அழுத்தத்திற்கும் விடுதலைப்புலிகள் பணிந்து கொடுக்கமாட்டார்கள் என்பதாகும்.

இவ்விடயத்தை டோக்கியோ மாநாடு தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டில் இருந்தே உலகம் புரிந்துகொண்டிருக்க முடியும். எவருடைய அழுத்தத்திற்கோ அன்றி ஒருவருடைய நலனிற்காகவோ புலிகள் பணிந்து போகப்போவதில்லை என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்ததைச் சுட்டிக்காட்ட முடியும்.

இரண்டாவதாக விடுதலைப் புலிகள் இயக்கம் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்த விடயத்தில் விட்டுக்கொடுப்புடன் செயற்படப் போவதில்லை என்பதாகும். ஏனெனில் ஏற்கனவே விடுதலைப் புலிகள் இயக்கம் போதியவரை விட்டுக்கொடுப்புக்களைச் செய்துள்ளது. அதாவது போதிய நெகிழ்ச்சிப்போக்கு புலிகளால் ஏற்கனவே கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

ஆகையினால், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் இனியும் நெகிழ்ச்சிப்போக்கிற்கு இடமில்லை எனத் தெரிவித்தமை புலிகள் ஒரு எல்லைக்கு வந்துள்ளதையே வெளிக்காட்டுகின்றது.அவ்வாறு ஒரு முடிவு எடுக்கப்படாதுபோனால் புலிகளின் கோட்பாடுகள், கோரிக்கைகள் என்பன கழுதை தேய்ந்து கட்டெறும் பாகிய கதையாகிவிடும். அத்தோடு தமிழ் மக்களின் உரிமைகளும் கனவாகிப்போபவையாகிவிடும்.

இதேவேளை, தீர்வை முன்வைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தரப்பிலேயே உள்ளது. ஏனெனில், அரசாங்கம் தெரிவித்த ஆலோசனைகள் விடுதலைப்புலிகளால்நிராகரிக்கப்பட்டுள்ளது. மேலும் இடைக்கால நிர்வாகம் குறித்த விடுதலைப்புலிகளின் எதிர்பார்க்கைகள் குறித்தும் தெளிவாகவே அரசிற்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், விடுதலைப்புலிகளின் மீது அழுத்தங்கள் பிரயோகிப்பது என்பது பொருத்தமற்றது என தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டமை முற்றிலும்சரியானதே. ஏனெனில் இறங்கிவரக்கூடிய அளவில் விடுதலைப்புலிகள் இயக்கம் இறங்கி வந்துவிட்டது என்ற நிலையில் அரசாங்கமே இனிப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். அதாவது அரசாங்கத்தின் கைகளிலேயே பந்து உள்ளது. ஆகையினால் அரசாங்கமே பந்தை எறிய முடியுமே ஒழிய புலிகளினால் இதற்கு எதுவும் செய்துவிட முடியாது. ஆகையினால், இடைக்கால நிர்வாகம் குறித்து அரசாங்கமே அறிவிப்புக்களை வெளியிட முன்வர வேண்டும்.

ஆகையினால், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச அரசுகள் சிறிலங்கா அரசு மீது அழுத்தங்ககளை பிரயோகிக்க வேண்டும். புலிகளைப் பொறுத்து அவர்கள் பெற்றுக் கொள்வதற்கு முற்படுகின்றவர்களே ஒழிய வழங்குவதற்கு எதையும் கொண்டவர்களாக இல்லை. ஆகையினால், புலிகளை வலியுறுத்துதல் என்பது பாயில் படுப்பவனை நிலத்தில் படு என வற்புறுத்துவது போன்றதாகும்.

ஆகையினால், அதிகாரங்கள் அதிகரித்து உள்ளவர்களிடமே அவற்றைப் பகிர்ந்தளிக்குமாறு வலியுறுத்த முடியும். அதுவே சமாதானப் பேச்சுவார்த்தைகளை விரைவுபடுத்தவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணவும் உதவக் கூடும். அவ்வாறு இல்லாது புலிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பது தேவையற்றது என்பது மட்டுமல்ல, நலிவுற்ற மக்களைச் சிறிலங்கா அரசுடன் சேர்ந்து மேலும் நலிவுறச் செய்யும் முயற்சியாகவே இருக்கும்.

ஆகையினால், சர்வதேச சமூகம் புலிகளின் நிலைப்பாட்டினையும், அரசியல் யதார்த்தத்தினையும் புரிந்து கொண்டு சிறிலங்கா தரப்பையே சமாதான முயற்சிகளை முன்னெடுக்குமாறு வற்புறுத்துதல் வேண்டும். அதிலும் குறிப்பாக, ஆளும், எதிர்க்கட்சிகள் இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்வு விடயத்தில் விட்டுக்கொடுப்புடன் செயற்படும் வகையில் அழுத்தத்தைப் பிரயோகிக்க முன்வரவேண்டும். இதுவே இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அவர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பாக இருக்க முடியும்.

# தேசிய பிரச்சினைக்கு பிரதான கட்சிகளிடம் ஆதரவைப் பெறுவதற்கு புதிய சட்டமூலம்!

## - அரசு விரைவில் சமர்ப்பிக்க முடிவு

(கொழும்பு)

இந்நாட்டில் ஏற்படும் எந்தப் பிரச்சினைக்கும் முகம் கொடுக்கும் வகையில் பிரதான கட்சிகளின் ஆதரவைத் திரட்டும் சட்டமூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன் பாராளுமன்ற முறையைப் பலப்படுத்தும் சட்டமூலம் என்பவற்றையும் விரைவில் நிறைவேற்ற அரசு தீர்மானித்துள்ளது.

இந்நாட்டின் சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக விரைவில் இவ்வாறான சட்டவரைபை ஏற்படுத்துவமாறு மதஸ்தாபனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பிரதமரைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இம் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நாட்டில் புதிய அரசியல் கலாச்சாரத்தை ஏற்படுத்துவதற்காக ஐ.தே.க. பிரதித் தலைவரும் மின்துறை அமைச்சருமான கருஜய சூரியவின் தலைமையின் கீழ் பொது அமைப்புகளோடு பேச்சு நடத்தி தயாரிக்கப்பட்ட வேலைத் திட்டங்களின் அறிக்கைகளும் சட்ட மூலத்தில் இடம்பெறவுள்ளன.

மேற்படி சட்டமூலங்கள் இன்னும் சில வாரங்களில் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# உடத்தலவின்ன படுகொலை வழக்கில் சாட்சியம் இரகசியமாகப் பதிவு!

(கொழும்பு)

உடத்தலவின்னவில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான முக்கிய சாட்சியான முகமட்சாஜித் என்பவரின் சாட்சிகள் இரகசியமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்றது. இவரது சாட்சியில் இருந்து சில இரகசிய விடயங்கள் வெளியாவதைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்காக, நீதிமன்றத்தில் இருந்து ஊடகவியலாளர்கள் இரு தடவைகள் நீதிமன்றிலிருந்து வெளியேற்றப்பட்டனர். சாட்சி சட்டத்தரணியின் கேள்வி ஒன்றுக்கு கடதாசி ஒன்றில் தனது பதிலை எழுதி நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

# பொய்த் தகவல்களுடன் கடவுச் சீட்டுக்களை பெறுவோர் மீது கடும் நடவடிக்கை

## - குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

பெயர் வயது என்பவற்றை மாற்றி மோசடிகள் மூலம் வெளிநாட்டு கடவுச்சீட்டைப் பெற முயற்சிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என குடிவரவு, குடியகல்வுத் திணைக்களப் பிரதான நிர்வாகி எச்சரித்துள்ளார்.

அண்மையில் தமது பிரிவுக்கு மேற்படி விடயம் தொடர்பாகப் பல புகார்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் முஸ்லிம் பெண்களே பெரும்பாலும் இவ்வாறான மோசடிகளில் ஈடுபடுவதாகவும் கடவுச் சீட்டுக்குச் சமர்ப்பிக்கப்படும் அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ் என்பவற்றைப் பெற்று சம்பந்தப்பட்டவர்களை நேரடியாக விசாரிக்கும் வகையில் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் மேற்படி நிர்வாக அதிகாரி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அம்பாறை, மட்டக்களப்பு கிண்ணியா, காத்தான் குடி போன்ற இடங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் மீது விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கட்டுப்பாட்டுச் சபை அழைப்பு நிராகரிப்பு

எதிர்வரும் நவம்பர் மாதம் முக்கோண ஒருநாள் போட்டியில் பங்குபற்ற வருமாறு இந்திய கிரிக்கெட் அணிக்கு சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அழைப்பு விடுத்தமையை, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நிராகரித்துள்ளது.

நவம்பர் மாதம் இங்கிலாந்து அணி சிறிலங்காவுக்கு விஜயம் செய்யவுள்ளது. 3டெஸ்ட் போட்டிகளில் 3ஒருநாள் போட்டிகளிலும் சிறிலங்கா-இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன.

இந்நிலையில் ஒருநாள் போட்டிகளுக்கு இந்தியாவையும் இணைத்து முக்கோணச்சுற்றுப்போட்டியாக நடத்த சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பட்டுச் சபை விரும்பியது.

ஆனால் இந்தியக்கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் எஸ்.கே.நாயர் இவ்விடயம் குறித்து செய்திச் சேவை ஒன்றில் பேசுகையில், நவம்பர் மாதம் இந்திய அணி அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இத்தகைய தொடர்களில் பங்குபற்றும் சாத்தியமில்லை என்று கூறியுள்ளார்.

## டெஸ்ட் தரப்படுத்தலில் லாறா, போலக் முதலிடம்

சர்வதேச டெஸ்ட் அரங்கில் சிறந்த வீரர்களைப் பட்டியலிடும் அமைப்பின் தரப்படுத்தலில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் பிறைன் லாறா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

சிறிலங்கா அணிக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை அடுத்து பட்டியலில் ஏற்பட்ட முக்கிய மாற்றம் இதுவாகும்.


துடுப்பாட்ட வீரர்கள் பட்டியலில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மத்யூ கெய்டன் இரண்டாவது இடத்திலும் ரிக்கி பொண்டிங் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணியின் வேகப் பந்து வீச்சாளர் சோன் போலக் முதலாவது இடத்திலும், சிறிலங்கா அணியைச் சேர்ந்த முத்தையா முரளிதரனும் அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த மெக்ராத் ஆகியோர் இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.

# பிரட்மனின் தொப்பிக்கு 28கோடி ரூபாய்!

உலகில் அதிசிறந்த துடுப்பாட்ட வீரரான டொனால்ட் பிரட்மனின் தொப்பி எதிர்வரும் மாதம் மெல்போர்ன் நகரில் ஏலத்தில் விடப்பட விருந்தது. எனினும் முன்கூட்டியே இதற்கான விலை தீர்மானிக்கப்பட்டுவிட்டது. 2லட்சத்து 85ஆயிரம் அமெரிக்க டொலருக்கு இதனை வாங்க ஒருவர் முன்வந்துள்ளார். அது சிறிலங்காப் பணத்தில் 28 கோடியாகும். கிரிக்கெட் வரலாற்றில் இவ்வாறான தொப்பி ஒன்று விலை போவது இதுவே முதல் தடவையாகும்.

இத்தொப்பியை வாங்க முன்வந்திருப்பவர், அவுஸ்திரேலியாவிலுள்ள பெயர் குறிப்பிடவிரும்பாத குபேரராவார்.



மேற்படி வீரரான பிரட்மன் கடைசியாக (1948) பங்கேற்ற இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரின் போது அணிந்த தொப்பியே இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ளது.

52 டெஸ்ட் தொடரில் பங்கு பற்றி 29 சதங்களுடன் 6996 ஓட்டங்களைப் பெற்ற இவரின் சராசரி - 99. 94 ஆகும். இந்த அசகாய சூரன் 2001ஆம் ஆண்டு தனது 92வது வயதில் காலமானது தெரிந்ததே.

## விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் கால் இறுதிக்குள் பிரவேசித்தோர்

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் வீனஸ் வில்லியம், வேராய்யுவனொராவை 6:1, 6:3 என்ற நேர் செற்றில் தோற்கடித்து கால் இறுதி சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் லின்சேடெவன் போட், ஜப்பானின் சினோபு அசாகோவை 6:4, 6:1 என்ற நேர் செற்களில் வென்றார்.

செரீனா வில்லியம்ஸ் ரஷ்யாவின் சுலேனா டெமன்ரியுவை 6:2, 6:1 என்ற நேர்செற்றில் வென்று கால் இறுதிச் சுற்றுக்கு நுழைந்துள்ளார்.

ஆடவர் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் போஸ், மார்ட்டினா நவரேட்டினா ஜோடி மூன்றாம் சுற்றுக்கு விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

ஆண்களுக்கான இரட்டையர் போட்டியில் பேஜ்ஸ் டேவிட்ரிக்கி நான்காவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.



# அரசியல் சாசனத்திற்கு முரணாக செயற்படின் விளைவுகள் விபரீதமாகும்

## சனாதிபதிக்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க எச்சரிக்கை

(கொழும்பு)

அரசியல் சாசனத்திற்கு முரணாக சனாதிபதி நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்கவேண்டி வருமென சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

உள்துறை அமைச்சின் பொறுப்புக்களை சனாதிபதி தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவர இருப்பதாக வெளியான செய்திகள் குறித்து பத்திரிகையாளர் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் சாசனத்திற்கு முரணாக ஏதேச்சதிகாரமாக சனாதிபதி எதையும் செய்ய முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

## பிற்போடப்பட்டுள்ளது

நாளையும், நாளை மறுதினமும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருந்த மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் இம்மாதம் 11 ஆம், 12ஆம் திகதிகளுக்குப் பிற்போடப்பட்டுள்ளது. இத்திகதி மாற்றத்தினை துணுக்காய், முல்லைத்தீவு வலயப் பாடசாலை அதிபர்கள் போட்டியில் பங்குகொள்ளும் மாணவர்களுக்கு அறிவித்து புதிய திகதிகளில் ஒட்டுசுட்டான் ம.வி.க்கு அனுப்பி வைக்குமாறு முல்லை. கல்வி வலயப் பணிப்பாளர் த.குருகுலராசா கேட்டுக்கொள்கிறார். (26)

# "விடுதலைப்புலிகள்" ஏடு வெளிவருகிறது

"போர்நிறுத்த ஒப்பந்த மீறல்கள் பேச்சைப் பின்நோக்கி இழுக்கும்" என்ற முகப்புச் செய்தியுடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப்புலிகள் ஏடு வெளிவருகின்றது.

பேச்சை நெருக்கடி நிலைக்குள் அரசு விரும்பித் தள்ளுகிறதா? என்று வினா எழுப்பும் ஆசிரியர் தலையங்கத்துடன் வெளிவரும் இவ் ஏட்டில் க.வே.பாலகுமாரன் எழுதிய "வரலாற்றின் இனிய பழிவாங்கல்", "சமாதானம்: ஏமாற்றப்படுவதில் மேற்குலகும் பலியிடப்படுவதில் தமிழர் மட்டும் தான்" போன்ற அரசியல் கட்டுரைகளும், கலாநிதி சோமஸ்கந்தன் எழுதிய "இராசதந்திரமும் கற்கவேண்டிய பாடமும்" மற்றும் "வெகு தொலைவில் இருக்கிறது யுத்தத்திற்குத் திரும்பவியலாத கட்டம்", "தமிழரின் சமூகச் சீரழிப்பிற்கு சிங்களப்படைகள் எத்தனிப்பு", "சமாதான காலத்துக் குடியேற்றங்கள்" போன்ற இன்னும் பல கட்டுரைகளும் உலைக்களம், வழித்தடம் போன்ற வழமையான அம்சங்களையும் தாங்கி இவ் ஏடு வெளிவருகின்றது. இது 'விடுதலைப்புலிகள்' ஏட்டின் வைகாசி-ஆனி மாதங்களுக்குரிய, 109 ஆவது குரலாகும்.

# இயக்கத்தில் இணைய முன்வந்த சிறுமிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

முல்லை. மாவட்டத்தில் கடந்த 25ஆம் திகதியன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தாமாகவே முன்வந்து இணைந்து கொண்ட இரண்டு சிறுமிகள் பெற்றோரிடம் 29ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டனர் 18 வயதிற்கு குறைவான காரணத்தினால் முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.தமிழ்நிலவு அவர்களினால் மகளிர் மாவட்டச் செயலகத்தில் வைத்து ஒப்படைக்கப்பட்டனர். (26)

## புலிகளுக்கு வந்த கொள்கலன்

# சனாதிபதி - பாதுகாப்பு அமைச்சு இடையில் முறுகல் நிலை

(கொழும்பு)

சிங்கப்பூரிலிருந்து விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்படும் கொள்கலன் தொடர்பாக சிறிலங்கா சனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சிற்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த கொள்கலனிலிருந்த பொருட்களை வழங்க அங்கீகாரமளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து சனாதிபதி விளக்கம் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இக் கொள்கலனில் நாட்காட்டிகள், புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்ட திறப்புக் கோர்வைகள் போன்ற பொருட்களே இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று முதல்...

தொடர்புக் கருவிகள் உட்பட சிறிய ரகக் கைத்துப்பாக்கிகளையும் பயன் படுத்தவுள்ளனர். இந்த அறிவித்தலை நேற்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ளது.

## உயர் பாதுகாப்பு...

வைகளுக்கும் அதிகமாக பலாலி இராணுவத்தினருடன் பேச்சுக்கள் நடாத்திய போதிலும் அவர் தொடர்ந்தும் அங்கு சென்றதாகவும் தனக்கு திருப்திகரமான பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லையெனவும் இது தொடர்பாக அவர் கொழும்பிலுள்ள மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதனைத் தொடர்ந்து லயனல் பலகல்ல உட்பட முப்படைத் தளபதிகளும் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுக்களின் பின் அதியுயர் பாதுகாப்பு வலயம் எச் சட்டத்தின் கீழ் அமுலில் உள்ளதென மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரால் கேள்வி எழுப்பப்பட்டபோது,

பொது மக்களின் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழேயே தாங்கள் இப்பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தியுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

ஆயினும் அவசரகாலச் சட்டம் செயலிழந்து போயுள்ள நிலையில் மேற்படிச் சட்டம் செல்லுபடியற்றதென தெரிவித்த மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர அனுமதி மறுப்பது அவர்களது மனிதவுரிமைகளை அப்பட்டமாக மீறும் செயல் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், படையினரின் பாதுகாப்புக் காரணங்களை மட்டுமே தாங்கள் முன்னுரிமை கொண்டுள்ளதாகவும், படைத்தரப்பின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத நிலையில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்கப் போவதில்லையென இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மனிதவுரிமை ஆணைக்குழுவினரின் கோரிக்கைகளுக்கமைய மீள்குடியமர்வுக்கு மக்களை அனுமதிப்பது தொடர்பான படைத்தரப்பின் நிலைப்பாடு தொடர்பான அறிக்கையொன்றினை அவர் சமர்ப்பிக்க உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## பிந்துனுவெவ...

கூறிய இவ்வழக்கு விசாரணையை மேற்கொண்ட கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகள் மூவரும் இந்தப் படுகொலைக்கு பொலிசாரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

சம்பவ தினத்தன்று காலை 6.30 மணியளவில் பெருமளவு பொலிசார் ஆயுதங்களுடன் சம்பவ இடத்திற்குச் சென்றபோதிலும் தாக்குதலைத் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வழக்கில் சாட்சியமளித்த பாதிக்கப்பட்ட இளைஞர்கள் தம்மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளனர். ஆகவே பொலிசாரின் இத்தகைய நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை என்றும் நீதிபதிகள் தீர்ப்பின் போது கண்டித்துள்ளனர்.

## கடல் மேதல்...

டும் படி கடற்படையினருக்கு அரசு அறிவித்துள்ளது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பிரிவினர் விடுதலைப்புலிகளின் படகுகள் தொடர்பான அறிக்கைகளைப் பெறுவதற்கும் தீர்மானித்துள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

## இரு பொலிசார்...

ஐந்து பேரைத் தவிர ஏனையவர்கள் நிரபராதிகள் என தீர்ப்பளித்து நீதிமன்றம் விடுதலை செய்தது.

வழக்கில் நான்காம் எதிரியான சாமி, 13ஆம் எதிரியான திஸநாயக்க, 21ஆம் எதிரியான ராஜபக்ச பிறேமால், 32 ஆம் எதிரியான சேனக கருணாசேன, 41ஆவது எதிரியான றிசான் வஜிர ரட்ணநாயக்க ஆகிய ஐவருக்கும் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதில் 32 ஆம் எதிரியான சேனக கருணாசேன சம்பவம் நடைபெற்ற சமயத்தில் பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்ரராக கடமையாற்றியுள்ளார். 41 ஆவது எதிரியான றிசான் வஜிர ரட்ணநாயக்க தியத்தலாவ பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியவராகும்.

இந்த ஐந்து எதிரிகளுக்கும் ஏனைய பல குற்றச்சாட்டுக்களின் பேரில் இருபத்தி மூன்றரை வருட சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டிருந்தது.

நீதிமன்றில் விளக்குகள் அணைகப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்ட போது ஐவரும் கதறி அழுதனர்.

எதிரிகள் சனாதிபதியிடம் கருணை மனுத்தாக்கல் செய்ய முடியும் என நீதிபதிகள் தமது தீர்ப்பில் கூறியுள்ளனர்.

## கனேடியத்...

வதற்காகவே வன்னிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர். இவர்களின் விஜயம் இன்று இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அவர்கள் நாளையே வன்னிக்கு வருகை தருவார்கள் என தெரியவந்துள்ளது.

## தமிழீழமெங்கும்...

நகருக்குச் சென்று புதுக்குடியிருப்புப் பகுதியில் பவனி வரும் என முல்லை. மாவட்ட கரும்புலிகள் தின செயற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, கரும்புலிகள் நினைவாக நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நாளை பிற்பகல் 1.30 மணியளவில் விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் இடம பெறும். இப் போட்டிகளில் குதிரையோட்டம், தலையணைச் சண்டை, கயிறிழுத்தல், கைக்கொடிச் சவாரி ஆகிய விளையாட்டுக்கள் முக்கியம் பெறுவதுடன் நெடுந்தீவு எதிர் வன்னி அணிகளுக்கிடையில் உதைபந்தாட்டப் போட்டிகளும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் முடிவில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும் எனவும் விளையாட்டுக்கழகங்களின் சமாசமும் நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவும் தெரிவித்துள்ளன. (26,ஸோ)

## படையினர் புதிய...

டையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் புதிய முகாம்கள் அமைக்கப்படுவது தடை செய்யப்படுவதை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குரங்குப்பாஞ்சான் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே இருக்கின்றது என்று கூறிய திலக், எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் படையினர் நுழைய முயன்றால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்டுள்ளதாகக் கூறப்படும் அறிக்கை இதுவரை உத்தியோகபூர்வமாகத் தமக்குக் கிடைக்கவில்லை என திலக் அவர்கள் நேற்று தெரிவித்தார்.

திருகோணமலை கோபாலபுரம் உட்பட மாவட்டத்தின் பல பகுதிகளில் கடற்படையினர் அண்மையில் .புதிய முகாம்களை அமைத்துள்ளமை தெரிந்ததே.

# சாவு அறிவித்தல்

## இரத்தினசோதி சாந்தினிதேவி

***காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இரத்தினசோதி சாந்தினிதேவி (பேபி) திங்கள் இரவு காலமானார். இவர் இரத்தினசோதியின் அன்பு மனைவியும், கோபிநாதனின் (ஒட்டுசுட்டான் ம.வி) தாயாரும் சந்திரசேகரரின் (கற்சிலைமடு) சகோதரியும், திருமதி. நளாயினி சந்திரசேகரின் (பிரதி அதிபர் ஒட்டுசுட்டான் ம.வி) மைத்துனியும் திருமதி. நமசிவாயம் மனோன்மணியின் மகளும் ஆவார். இறுதிக் கிரிகை சுதுமலை வடக்கு மானிப்பாயில் இன்று நடைபெறும்.***

தகவல்:-
திரு.இரத்தினசோதி (கணவன்)

(3245)

# பணிநிலை வெற்றிடம்

**01. ஆசிரியர்கள் பணிநிலை**
சகல பாடங்களுக்குமான ஆசிரியர்கள் தேவை (தரம் 01-A/L வரைக்கும்) பயிற்றப்பட்டவர்கள், பட்டதாரிகள், கற்பிக்க வல்லமையுடையவர்கள் (A/L - கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்)

**02. அலுவலக பணிநிலை**
கணக்காளர், தட்டெழுத்தாளர், கணினி.

**03. பராமரிப்பாளர்கள் பணிநிலை.**
10 வயதிற்குட்பட்ட சிறுவர்களைப் பராமரிப்பதற்கு 35 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் தேவை. கா.பொ.த/உயர்தரம் வரை படித்திருக்கவேண்டும்.

**04. தொடர்பாளர் பணிநிலை.**
30 வயதிற்கு மேல் உள்ளவராகவும், தரம் 8ஆம் வகுப்பிற்கு மேல் படித்திருக்க வேண்டும்.

**05. சாரதி பணிநிலை.**
உழவு வேலை செய்யக்கூடிய வகையில் சாரதி தேவை 30 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

**06. விவசாயப் பணிநிலை.**
3 வருடத்திற்கு மேல் விவசாயப்பயிர்ச் செய்கை அனுபவம் உள்ளவராகவும் 30 வயதிற்கு மேல் இருக்க வேண்டும்.

**விண்ணப்பமுடிவுத் திகதி:- 16.07.2003**

**காந்தரூபன் அறிவுச் சோலை,**
**சிறுவர் இல்லம்,**
**கைவேலி, புதுக்குடியிருப்பு.**

(3313)




இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.